**சார்பு நீதிமன்றம், அருப்புக்கோட்டை**
**முன்னிலை : திரு. வ. இராமலிங்கம், பி.எஸ்.சி., பி.எல்.,**
**சார்பு நீதிபதி, அருப்புக்கோட்டை**

**2023 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 18 ஆம் நாள் புதன்கிழமை**

**வ.வி.எண்.5/2023 இன் அ.வ.எண்.94/2020**

1. காளிமுத்து
2. ராமமூர்த்தி
3. லட்சுமணமூர்த்தி
4. பழனிமுருகன் ... மனுதாரர்கள்/வாதிகள்

/எதிர்/

1. அழ. ராமராசு
2. சக்திதேவி ... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனுவானது இந்நீதின்றம் முன்பாக இறுதியான விசாரணைக்காக 09.10.2023 அன்று வந்தபோது மனுதாரர்கள்/வாதிகள்தரப்பில் வழக்கறிஞர் திரு.ஆர். என்.பாலசுப்பிரமணியன் அவர்கள் ஆஜராகியுள்ள நிலையிலும் எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகள்தரப்பில் வழக்கறிஞர் திரு.கே.எம்.விஜயகுமார் அவர்கள் ஆஜராகியுள்ள நிலையிலும் இருதரப்பும் கேட்கப்பட்டும் ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டும் இதுநாள்வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

**உத்தரவு**

1. இம்மனுவானது மனுதாரர்/வாதிதரப்பில் அசல் வழக்கில் மனுதாரர்தரப்பில் ஆவணங்கள் தாக்கல் செய்வதில் ஏற்பட்ட காலதாமதத்தை மன்னித்து மனுவுடன் தாக்கல் செய்யும் ஆவணங்களை வாதிகள்தரப்பு ஆவணங்களாக குறியீடு செய்து கொள்ள உத்தரவிடக் கோரி சிபிசி ஆர்டர் 7 ரூல் 14(3) மற்றும் பிரிவு 151 சிபிசியின்படி மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. மனுவின் சுருக்கம்:–

அசல் வழக்கில் மனுதாரர்கள்தரப்பு முதல் விசாரணையில் சில ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளனர். மேற்படி ஆவணங்களை சார்பதிவாளர் அலுவலகத்தில் நகல் எடுத்து தாக்கல் செய்துள்ளார். ஒரு சில ஆவணங்களை வீட்டில் தேடி எடுத்து தாக்கல் செய்துள்ளார்கள். எனவே மேற்படி ஆவணங்களை எதிர்வழக்குரையுடன் தாக்கல்

செய்ய இயலவில்லை. மேற்படி ஆவணங்கள் மனுதாரர்களின் வழக்கை நிரூபிக்கும் மிக முக்கிய ஆவணங்களாகும். எனவே அசல் வழக்கில் மனுதாரர்கள்தரப்பில் ஆவணங்கள் தாக்கல் செய்வதில் ஏற்பட்ட காலதாமதத்தை மன்னித்து மனுதாரர்தரப்பில் தாக்கல் செய்யப்படும் ஆவணங்களை குறியீடு செய்து கொள்ள வேண்டி மனுதாரர்கள் இம்மனுவைத் தாக்கல் செய்துள்ளார்கள்.

3 .<u>எதிர்மனுதாரர்தரப்பு மறுப்புரையின் சுருக்கம்:–</u>

எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தங்கள் கட்சியை தெளிவாக விளக்கி அ.வ.எண்.94/2020 வழக்கில் எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளனர். மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் உரிய காலத்தில் தாக்கல் செய்யாததற்கு ஏற்க தகுந்த காரணங்கள் எதனையும் மனுதாரர்கள் தங்கள் மனுவில் கூறவில்லை. மேலும் மனுதாரர்கள் வழக்கிற்கு பிந்தைய ஆவணங்களை உற்பத்தி செய்து தாக்கல் செய்துள்ளதில் மனுதாரர்களின் மனு எடுத்த எடுப்பிலேயே தள்ளபடி செய்யத்தக்கது ஆகும். மேலும் மனுதாரர்கள் மனுவுடன் தாக்கல் செய்துள்ள அருப்புக்கோட்டை நீதித்துறை நடுவர் நீதிமன்ற குற்ற வழக்கான சி.சி.எண்.245/2016 வழக்கிற்கும் இந்த வழக்கிற்கும் எந்தவித சம்பந்தமும் கிடையாது. குற்ற வழக்கு நடவடிக்கைகளை உரிமையியல் வழக்குகளில் ஆவணங்களாக தாக்கல் செய்ய இயலாது. எனவே மனுதாரர்களின் மனுவானது தள்ளுபடி செய்யத்தக்கதாக உள்ளது. எனவே மனுதாரரின் மனுவை செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்து உத்தரவிட வேண்டும்.

4. இம்மனுவில் தீர்க்கப்படவேண்டிய பிரச்சினை என்னவெனில் இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதே ஆகும்.

5. <u>தீர்வு:–</u>

மனுதாரர்தரப்பில் அசல் வழக்கில் மனுதாரர்கள்தரப்பு முதல் விசாரணையில் சில ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளதாகவும் மேற்படி ஆவணங்களை சார்பதிவாளர் அலுவலகத்தில் நகல் எடுத்து தாக்கல் செய்துள்ளதாகவும் ஒரு சில ஆவணங்களை வீட்டில் தேடி எடுத்து தாக்கல் செய்துள்ளதாகவும் எனவே மேற்படி ஆவணங்களை எதிர்வழக்குரையுடன் தாக்கல் செய்ய இயலவில்லை என்றும் மேற்படி ஆவணங்கள் மனுதாரர்களின் வழக்கை நிரூபிக்கும் மிக முக்கிய ஆவணங்கள் என்றும் எனவே அசல் வழக்கில் மனுதாரர்கள்தரப்பில் ஆவணங்கள் தாக்கல் செய்வதில் ஏற்பட்ட

காலதாமதத்தை மன்னித்து மனுதாரர்தரப்பில் தாக்கல் செய்யப்படும் ஆவணங்களை குறியீடு செய்து கொள்ள அனுமதியளித்து உத்தரவிடவேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளது.

6. எதிர்மனுதாரர்தரப்பில் மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் உரிய காலத்தில் தாக்கல் செய்யாததற்கு ஏற்க தகுந்த காரணங்கள் எதனையும் மனுதாரர்கள் தங்கள் மனுவில் கூறவில்லை என்றும் மேலும் மனுதாரர்கள் மனுவுடன் தாக்கல் செய்துள்ள அருப்புக்கோட்டை நீதித்துறை நடுவர் நீதிமன்ற குற்ற வழக்கான சி.சி.எண்.245/2016 வழக்கிற்கும் இந்த வழக்கிற்கும் எந்தவித சம்பந்தமும் கிடையாது என்றும் குற்ற வழக்கு நடவடிக்கைகளை உரிமையியல் வழக்குகளில் ஆவணங்களாக தாக்கல் செய்ய இயலாது என்றும் கூறப்பட்டுள்ளது.

7. இருதரப்பு வாதமும் கேட்கப்பட்டது. எதிர்மனுதாரர் தரப்பில், மனுதாரர் மனுவில் கோரியுள்ள பரிகாரம் மனுதாரருக்கு கிடைக்கத்தக்கதல்ல என்று கூறி மறுப்புரை தாக்கல் செய்திருந்தாலும் எதிர்மனுதாரர்தரப்பு மறுப்புரையைப் பார்க்கும்போது, மனுதாரரின் மனுவினை மறுக்கும்வகையில் மேம்போக்காக மறுப்புரை தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகக் காணப்படுகிறதே தவிர இம்மனுவை அனுமதிப்பதால் எதிர்மனு தாரருக்கு எந்தவகையில் பாதிப்பு ஏற்படும் என்பது குறித்து எதிர்மனுதாரர் தரப்பில் எவ்வித கூற்றும் கூறப்படவில்லை. எதிர்மனுதாரர்தரப்பில் இம்மனுவினை அனுமதிப்பதால் எதிர்மனுதாரர்களுக்கு வேறு பாதிப்பு எதுவும் ஏற்பட்டு விடும் என்பதாகக் கூறி மனுதாரரின் மனுவினை அனுமதிப்பதற்கு வேறு கடுமையான ஆட்சேபணை எதுவும் தெரிவிக்கப்படவில்லை. எனவே மேற்கூறப்பட்ட காரணங்களின் அடிப்படையிலும் மனுவின் தன்மை மற்றும் சூழ்நிலையைக் கருத்திற் கொண்டும் மனுதாரருக்கு வாய்ப்பளிக்கும்பொருட்டு, இம்மனு அனுமதிக்கத்தக்கது என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

8. முடிவாக, இம்மனு அனுமதிக்கப்பட்டு உத்தரவிடப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

இவ்வுத்தரவு என்னால் சுருக்கெழுத்துத் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் படித்துப் பார்த்து பிழைநீக்கம் செய்யப்பட்டு, இத்திறந்த நீதிமன்றத்தில் இன்று 18.10.2023 தேதி அவையறியப் பகரப்பட்டது.

V RAMALINGAM Digitally signed by V RAMALINGAM

சார்பு நீதிபதி,
அருப்புக்கோட்டை.

<u>மனுதாரர்தரப்பு சாட்சிகள், சான்றவாணங்கள் : </u> இல்லை

<u>எதிர்மனுதாரர்தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள்:–</u> இல்லை

V RAMALINGAM Digitally signed by V RAMALINGAM

சார்பு நீதிபதி,
அருப்புக்கோட்டை.

சார்பு நீதிமன்றம், அருப்புக்கோட்டை
வ.வி.எண்.5/23 இன்
அ.வ.எண்.94/2020
உத்தரவு நாள் – 18.10.2023